# சந்திவிதிகளும் புணரியல்விதிகளும் -

## ஒரு மொழியியல் கண்ணோட்டம் -

டேவிட் தா. ஆரோக்கியம்.

மொழி காலத்திற்குக் காலம் ஏற்படும் மாறுபாடுகளை ஏற்று நடக்கும் தன்மையைக் கொண்டது. பண்டைத் தமிழ் தொடங்கி இற்றைய தமிழ் வரை ஆராய்வோர்க்கு இது தெளிவாக விளங்கும். தமிழில் ஒவ்வொரு கால கட்டத்திலும் எழுதப்பட்ட வெவ்வேறு இலக்கியங்களும் அவற்றுக்கு விளக்கமுறையில் எழுதப்பட்ட இலக்கணங்களும் மொழியின் மாற்றத்தை மெய்ப்பிக்கின்றன.

*'பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல காலவகையி னானே'* (1)

என்று பவணந்தியார் கூறியிருப்பது மேற்கூறிய கருத்தோடு நோக்கத்தக்கதாகும். பவணந்தியாரின் கருத்துக்கு இன்றைய மொழியியல் வல்லுநர்களும் உடன்படுகின்றனர்.

தமிழ் இலக்கணங்களை (தொல்காப்பியம் தொடங்கி தமிழ் நூல் ஈறாக) ஆராயுங்கால், அவை மரபிலக்கணங்களாகக் காணப்படுகின்றன. இந்த மரபிலக்கணங்களின் எழுத்ததிகாரத்தில் பெரும் பகுதி 'புணரியல் விதிகள்' என்றோ 'சந்திவிதிகள்' என்றோ விவரிக்கப்பட்டுள்ளன. இவ்விதிகள் நம்மில் பலருக்கு வேம்பாகக் கசக்கின்றன. புணரியல்விதிகள் அல்லது சந்திவிதிகள் பால் பலருக்கு ஏற்படும் மயக்கமும் தயக்கமுமே இதற்குக் காரணம்.

இன்று துரிதமாக வளர்ந்து வரும் மொழியியல்துறை, மொழியை ஒவ்வொரு நிலையிலும் நிறுத்தி -அறிவியல்பூர்வமாக ஆராய்ந்து விளக்கங்களையும் தெளிவுகளையும் தருகின்றது. ஆகவே நம்முடைய இலக்கண உலகிற்கும் (குறிப்பாக புணரியல்விதி அல்லது சந்திவிதி) மொழியியலின் பார்வை அவசியமாகின்றது. அப்பொழுதான் நமது மொழியில் பழையன கழிதலையும் புதியன புகுதலையும் தெளிவாக உணர முடியும். சுருங்கக் கூறினால், 'தமிழ் மொழியில் நிகழும் மாற்றங்களுக்கேற்ப புதிய கோட்பாடுகள் -புதிய விதிகள் -புதிய கருத்துகள் தேவைப்படுகின்றன' (2) என்பதை அறிந்து மொழியியலின் கண்ணோட்டத்தில் இலக்கணங்களை ஆராய வேண்டிவருகிறது.

இக்கட்டுரையின் தலைப்பு 'சந்திவிதிகளும் புணரியல்விதிகளும்' என்று கூறப்பட்டிருப்பினும் நன்னூலின் விதிகளையும் தொல்காப்பியத்தின் விதிகளையும் ஒப்பீட்டு நிலையில் வைத்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

மரபிலக்கணங்களின் எழுத்ததிகாரத்தில் பெரும் பகுதி சந்தி அல்லது புணரியல் என்னும் தலைப்புகளில் வந்துள்ளது. சந்தி எனும் சொல், வடமொழி இலக்கணத்திலும் எழுத்துக்களின் புணர்ச்சியையே குறிக்கின்றது (3). நமது மொழியின் மரபிலக்கணங்களில் சந்தி அல்லது புணரியல் என்னும் இருவேறுன பதங்கள் கையாளப்பட்டிருப்பினும் அவை ஒரே வகையான பொருளிலும் பயன்பாட்டிலும் விதிகளை அமைத்திருக்கின்றன என்பதை அறிய முடிகிறது (4). இன்றைய மொழியியல் வல்லுநர்களில் பலரும் இக்கருத்துக்கு உடன்படுகின்றனர். இவர்களில் பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார், வடமொழிக்கும் தமிழுக்கும் புணர்ச்சியிலுள்ள வேறுபாடுகளைத் தொகுத்துக் கூறும்போது "வடமொழியில் அகநிலைச் சந்தியும் புறநிலைச்சந்தியும் பலவகையால் வேறுபடுகின்றன ; ஆனால் தமிழில் இரண்டு வகைச் சந்தியிலும், ஒலிகளைப் பொறுத்தமட்டில் எவ்வித பெரிய வேறுபாடும் காணப்படுவதில்லை" (5) என்றுள்ளார். இவருடைய இக்கருத்தைச் சி. சுப்பிரமணியம் என்பார் அப்படியே ஏற்றுக் கொண்டு இரண்டு சந்திகளில் ஏதாவது ஒன்றில் விதி அமைத்தாலே போதும் என்று கூறியுள்ளார் (6). மொழியியலின் வழி ஆராய்கையில் இவர்களுடைய கூற்றுகள் தவறாகும் என்பதை அறியலாம். தமிழிலும் அகச்சந்தியும் புறச்சந்தியும் வேறுபடுகின்றன. நன்னூலார்,

"பதமும் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி. . . . . . . . . (7)

என விதியமைத்துள்ளார். மேற்காணும் நூற்பாவைக் கீழ்க்காணுமாறு வகை செய்வோம்.

(அ) பதம் + விகுதி
அகச்சந்தி
(ஆ) பதம் + உருபு

(இ) பதம் + பதம் புறச்சந்தி

ஆகவே மொழியியலின் கண்ணோட்டத்தில் நன்னூலின் விதிகளை ஆராய்வோர்க்குத் தமிழிலும் இரு வேறான சந்திகள், வெவ்வேறான நிலைகளில் விளக்கப்பட்டிருப்பதை உணர முடியும்.

தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் எவ்வாறு சந்திவிதிகள் அல்லது புணரியல் விதிகள் விவரிக்கப்பட்டுள்ளன என்பதை இவண் காண்போம். தொல்காப்பியர் புணர்ச்சியைப் பல பகுதிகளாகப் பகுத்து விதிகள் கூறியிருந்தாலும் (8) அடிப்படையில் மூன்று நிலைகளை வகுத்துக்கொண்டுள்ளார்.

அ. எழுத்து வகையால் நான்கு (9) — எ. கா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| i. | உயிர் | (- v) | முன் | உயிர் | (v -) | மணி + ஓசை |
| ii. | உயிர் | (- v) | முன் | மெய் | (c -) | பூ + சட்டி |
| iii. | மெய் | (- c) | முன் | மெய் | (c -) | ஆல் + விழுது |
| (iv) | மெய் | (- c) | முன் | உயிர் | (1 -) | ஆல் + இலை |

(v - vowel, c - consonant)

ஆ. சொல் வகையால் நான்கு (10) — எ. கா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| i. | பெயர் | (n) | முன் | பெயர் | (n) | சாத்தன் + கை |
| ii. | பெயர் | (n) | முன் | தொழில் | (v) | சாத்தன் + உண்டான் |
| iii. | தொழில் | (v | முன் | பெயர் | (n) | வந்தான் + முருகன் |
| iv. | தொழில் | (v) | முன் | தொழில் | (v) | வந்தான் வழங்கினான் |

(n - noun, v - verb)

இ. தொடர் வகையால் இரண்டு (11) — எ. கா.

| | | |
|---|---|---|
| i. | வேற்றுமைப் புணர்ச்சி | கோயிலை + கட்டினான் |
| ii. | அல்வழிப் புணர்ச்சி | முருகா + வா |

மேலும் புணர்ச்சியின்கண் நிலைமொழியின் ஈறும் வருமொழி முதலும் இணைகையில் திரிபு (மெய் பிறிதாதல், மிகுதல், குன்றல்) அல்லது இயல்பு நிகழலாம் என்றுள்ளார் (12). இனி தொல்காப்பியத்தின் வழிநூலாகிய நன்னூலின் விதிகளைக் காண்போம்.

நன்னூலார் புணரியலை உயிரீற்றுப்புணரியல் (13), மெய்யீற்றுப் புணரியல் (14) உருபு புணரியல் (15) என வகைப்படுத்தி விதிகளைக் கூறியுள்ளார். 'சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்' (16) என்ற வாய்ப்பாட்டின்படி

*' மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களுந்*
*தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்*
*பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்*
*இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே'* (17)

என்று நூற்பாவை இயற்றி, நாம் முன்னர்க் கண்ட தொல்காப்பிய விதிகளைத் தொகுத்துள்ளார். இயல்புப் புணர்ச்சியை 153 -ஆம் நூற்பாவிலும் விகாரப்புணர்ச்சியை (தொல்காப்பியர் திரிபு என்றுள்ளார்) 154 -ஆம் நூற்பாவிலும் தெளிவு படுத்தியுள்ளார். நன்னூலார் புணரியல் விதிகளைக் கூறுங்கால், தொல்காப்பியப் புணரியல் நூற்பாக்களை பல இடங்களில் சுருக்கியும் தொகுத்தும் அப்படியே ஏற்றும் கூறியுள்ளார் (18). டாக்டர். பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார், "தமிழ்ச்சொற்களின் புணர்ச்சிபற்றி இளம்பூரணர், வீரசோழியத்தார், நேமிநாதத்தார், தொல்காப்பியர் கூறிய யாவற்றையுங் கூட்டித் தொகுத்து நன்னூலார் கூறுகிறர்" (19) என்று குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து மொழியியலின் மூலமாகச் சந்தியையும் புணரியலையும் எவ்வாறு ஆராயலாம் என இவண் காண்போம். இலக்கணத்தைத் தெளிவு படுத்தவும் எளிமைப்படுத்-தவும் மொழியியல் அவசியமானதாகும்.

மொழியியலில் ஆராயப்பட்டுவரும் உருபொலியனியல் (MORPHOPHONEMICS) என்பது சந்திவிதிகளை மட்டுமல்லாது பல்வேறுன மாற்றுருபன்களையும் ஆராய்கிற ஒரு துறையாகும் (20). மொழியியல் வல்லுநர்கள் உருபொலியனியலில் உருபன் அடையக் கூடிய மாற்றத்தை ஒலிக்கட்டுப்பாடு உடைய மாற்றம் (ஒலியினுல் கட்டுண்ட மாற்றுருபுகள் - PHONOLOGICALLY CONDITIONED ALTERNANT) சொல் கட்டுப்பாடு உடைய மாற்றம் (உருபனுல் கட்டுண்ட மாற்றுருபுகள் - MORPHOLOGICALLY CONDITIONED ALTERNANT) என இருவகையாகப் பகுப்பர் (21). தமிழ்மொழியில் (தொல்காப்பியரால்) கூறப்படும் உயிர் முன் உயிர், உயிர் முன் மெய், மெய் முன் உயிர் மற்றும் மெய் முன் மெய் ஆகியவற்றிற்கு ஒலியன் அடிப்படையிலும் பெயர் முன் பெயர், பெயர் முன் தொழில், தொழில் முன் பெயர் மற்றும் தொழில் முன் தொழில் ஆகியவற்றிற்கு உருபன் அடிப்படையிலும் விதி வகுக்க முடியும் (22). ஆகவே, தமிழ்மொழியின் (தொல்காப்பிய) இலக்கண அமைப்பிலும் மொழியியலின் தன்மை அமைந்துள்ளது. உருபொலியனியலை விளக்குவதற்கு அடிப்படையாகவுள்ளவை உருபன்கள். உருபன்களை மூன்று நிலைகளில் கண்டறியலாம்.

- அ. இரண்டு உருபுகள் வேற்றுநிலை வழக்கில் வரும்பொழுது அவை மாற்றுருபுகளாகா.
- ஆ. ஒரே பொருளைக் கொடுத்தால் ஒழிய இரண்டு உருபுகள் மாற்றுருபுகள் ஆகா.
- இ. உருபுகளை மாற்றுருபுகளாகக் கொள்ளும்போது, இவை அந்த அந்த மொழியின் அமைப்பிற்குப் பொருந்தி இருக்கின்றனவா, என்பதையும் கவனிக்க வேண்டும் (23).

**ஒலிக்கட்டுப்பாடு உடைய மாற்றம் (ஒலியனுல் கட்டுண்ட மாற்றுருபுகள்)**

ஒலிக்கட்டுப்பாடு உடைய மாற்றத்தினை இனிவரும் உதாரணங்களின் வழி ஆராயலாம்.

மரம் + கொடி › மரங்கொடி
மரம் + செடி › மரஞ்செடி
மரம் + போல் › மரம்போல்

நிலைமொழிகளின் ஈற்றிலுள்ள மகரம், ஒலிக்கட்டுப்பாடு உடைய மாற்றம் பெறுவதால், அது பலவாறுக மாறுகிறது. இதனை மேலும் சுருங்கக் காணலாம்.

(ங்) - கொ
ம் + (ஞ்) - செ
(ம்) - போ

மகர ஒலியனின் மாற்றுருபுகளாக மேற்காணும் அடைப்பிலுள்ள எழுத்துகள் காணப்படுகின்றன. மகர உருபொலியன் பகர ஈரிதழ் அடைப்பொலியைத் தொடர்ந்து, அதே நிலையில் வருதல் இயற்கை. ககர கடையண்ண அடைப்பொலிக்கு முன்னர் ஙகர கடையண்ண மூக்கொலி வருதல் முறையே. அதுபோலவே சகர நுனியண்ண மூக்கொலி தோன்றுதலும் சரியாகும். ஆகவே மேற்காணும் முறையைப் பிறப்பியல் அடிப்படையில் உருபொலியனியலில் காண்பதே சிறப்பாகும்.

**சொல்கட்டுப்பாடு உடைய மாற்றம் (உருபனுல் கட்டுண்ட மாற்றுருபுகள்)**

சொல் கட்டுப்பாடு உடைய மாற்றத்தினை வருணனை மொழியலார் சொல்லியலில் (MORPHOLOGY) விளக்குவார்கள். புளும்பீல்ட் என்பார் சொல் கட்டுப்பாடு உடைய மாற்றத்தை வடமொழியில் காணப்படும் புறச்சந்தியுடன் ஒப்புமை காட்டியுள்ளார் (24).

இனிவரும் உதாரணங்களின் வழி தமிழில் இம்மாற்றம் எவ்வாறு நிகழ்கிறது எனக் காண போம்.

I. அ. பெய்தது : பெய் + த் + அது
ஆ. தேய்ந்தது : தேய் + ந்த் + அது

II. அ. மருண்டான் : மருள் + ண்ட் + ஆன்
ஆ. அருளினுன் : அருள் + இன் + ஆன்

முதல் உதாரணத்தில் வினைச்சொல் இரண்டும் யகர மெய்யில் முடிகின்றன. இரு வேறுன (த், ந்த்) இறந்தகால விகுதிகள் வந்துள்ளன. ஆகவே இவ்விரண்டு விகுதிகளும் சொல் கட்டுப்பாடு உடைய மாற்றுருபுகளாகும். இரண்டாவது உதாரணத்திலும், நிலைமொழி கள் ளகர ஈற்றில் முடிந்துள்ளன. இறந்தகால விகுதிகளாக ண்ட், இன் ஆகிய இரண்டும் வந்துள்ளன. இவ்விரண்டு விதிகளும் கூட சொல் கட்டுப்பாடு உடைய மாற்றுருபுகளாகக் கருதப்படுகின்றன (25). இவ்விரண்டு உதாரணங்களையும் நன்கு நோக்கும்போது, இறந்தகால விகுதிகள் ஒன்றுக் கொன்று (த் -ந்த், ண்ட் -இன்) மாற்றுருபுகளாகக் காணப்பட்டாலும் ஒலிக்கட்டுப்பாடுடைய மாற்றங்களாக வருணிக்க முடியவில்லை. மேலும் இவற்றுக்குப் பிறப்பியல் அடிப்படையிலும் (ஒலிக்கட்டுப்பாட்டுக்குக் கூறுவது போல) விளக்கம் கூற முடியாததால், சொல்கட்டுப்பாடு உடைய மாற்றமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். நன்கு ஆராய்ந்தால் ஒலிக்கட்டுப்பாடுடைய மாற்றங்களை உருபொலியனியல் மூலமாகவும் சொல்கட் டுப்பாடு மாற்றங்களை உருபனியல் மூலமாகவும் வருணிக்க முடியும் (26).

இனி உருபொலியனியலைப் புணரியல் விதிகளுடன் ஒப்புநோக்குவோம். நிலைமொழி வருமொழி ஆகியவற்றின் ஈறும் முதலும் புணர்ச்சியில் சேரும்போது இயல்பும் திரிபும் (விகாரமும்) ஏற்படுகின்றன. உருபொலியனியலிலும் இத்தகைய மாற்றங்கள் நிகழ்கின்றன. அதன் விளைவாக ஓர் உருபனின் மாற்று ஒலியன்களும் ஏனைய மாற்றங்களும் தோன்றுகின்றன. நன்னூலார் புணரியலை விவரிக்கையில் மூன்றுகப் பகுத்திருந்ததை முன்னர்க் கண்டோம். தொடர்ந்து உருபொலியனியலின் மூலமாக நன்னூலின் புணரியல்விதிகளை எவ்வாறு எளிமைப் படுத்த முடியும் என்பதை இவண் காண்போம். புணரியலை மொழியியலின் கண்ணேட்டத்தில் பார்க்கும்போது ஒலியனியல், உருபனியல், தொடரியல், அசை போன்ற பகுதிகளையும் தோன்றல், திரிதல், மறைதல், இயல்பாதல் போன்ற நிகழ்வுகளையும் மேலும் எளிமையாக அறிந்து கொள்ளலாம்.

மரபிலக்கணங்களில் காணப்படும் 'நிலைமொழி ஈறும் வருமொழி முதலும்' என்பதனை மொழியியல் நோக்கில் 'முதல் உருபனுடைய இறுதி ஒலியனும் அடுத்த உருபனுடைய முதல் ஒலியனும்' என்ற நிலைகளில் ஒப்பிடலாம். மரபிலக்கணங்களில் குறிப்பிடுவதுபோல அனைத்து புணரியல் விதிகளையும் நிலைமொழி ஈறும் வருமொழி முதலுமே மாத்திரம் நிர்ணயிப்பதில்லை. மொழியியலார் கருத்துப்படி சிற்சில இடங்களில் நிலைமொழி வருமொழி ஆகியவற்றுக்குள் இருக்கும் ஒலியன்களும் இவ்விதிகளை நிர்ணயிக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இனி உருபொலியனியல் கண்ணேட்டத்தில் விதிகளை வகுப்போம்.

**ஒலியனியல் அடிப்படை (சில விதிகள்)**

i. இரண்டு மூக்கொலிகள் ஒன்றன்பின் ஒன்று தொடரும்போது ஓரினமாதலும் மறைதலும் ஏற்படும்.

அ. வான் + நிலை
வான் + நிலை (நி › னி) ஓரினமாதல்
வானிலை (ன்) மறைதல்

ii. நெட்டுயிருடன் வரும் அண்பல்லின லகரம், வருகின்ற உருபனுடைய நகர ஒலியனுடன் சேரும்போது னகர அண்பல்லினம் தோன்றி ஓரிட லகரத்தை மறைக்கும் (27)

அ. மேல் + நிலை › மேனிலை
இ. நால் + நூறு › நானூறு

*ஒரு மருங்கொலி மூக்கொலியுடன் இணையும்போது ஓரிட மூக்கொலியாக மாறும்* (28).

அ. கொல் + மார் › கொன்மார்
ஆ. நல் + நாடு › நன்னாடு

**உருபனியல் அடிப்படை**

நிலைமொழி (முதல் உருபன்) பெயர்ச்சொல்லா அல்லது வினைச்சொல்லா என்பதை கவனித்தல் வேண்டும் ; இல்லையெனில் விதியை வரையறுக்க முடியாது (29).

i. அ. நடு + இல் › நடுவில்
ஆ. நடு + அ › நட

ii. அ. கெடு + ஐ › கெடுவை
ஆ. கெடு + அ › கெட

iii. அ. ஆடு + ஐ › ஆட்டை
ஆ. ஆடு + அ › ஆட

மேலே காணப்படும் உதாரணங்களில் 1. அ, ii. அ, iii. ஆ ஆகியவற்றில் உள்ளவை பெயரும் வேற்றுமையும் இணைவதைக் காட்டுகின்றன. i. ஆ, ii. ஆ, iii. ஆ ஆகியவற்றில் வினையும் விகுதியும் இருக்கின்றன. மேலும் சந்தியில் நிகழும் புணர்ச்சி மாற்றங்களுக்கு ஒலியனோ அசையோ காரணமாகா. இம்மாற்றங்களுக்கு அடிப்படையாக இருப்பது உருபனியலேயாகும் (30).

**தொடரியல் அடிப்படை**

தொடரியலை வேற்றுமை அல்வழி இவ்விரண்டு நிலைகளிலும் காணலாம். தொல்காப்பியர் வேற்றுமையை எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் கூறியுள்ளார், 113-ஆம் நூற்பாவில்,

*'ஐஒடு கு இன் அதுகண் ணென்னு
மவ்வா றென்ப வேற்றுமை யுருபே'* (31)

வேற்றுமை உருபுகள் ஆறு எனக் குறிப்பிட்டுள்ளார். ஆயின் உருபியலில் எழுவாயையும் விளியைங்கூட்டி வேற்றுமை எட்டென்பார். மேலும் வேற்றுமை பெயருடனேயே புணரும் என்பதையும் குறித்துள்ளார் (32). ஆனல் தொல்காப்பியர் அல்வழியைத் தெளிவாகக் கூறவில்லை. நன்னூலார் வேற்றுமையையும் அல்வழியையும் கீழ்க்காணுமாறு தெளிவு படுத்தியுள்ளார்.

*'வேற்றுமை ஐம்முத லாறு மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே'* (33)

வேற்றுமையில் ஆறு நிலைகளையும் அல்வழியில் (5 தொகை நிலைத்தொடர்களும் 9 தொகா நிலைத்தொடர்களும்) பதினன்கு நிலைகளையும் விளக்கியுள்ளார். இனி உருபொலியனியல் கண்ணேட்டத்தில் வேற்றுமையையும் அவ்வழியையும் காண்போம்.

அ. நாய்க்குட்டி

வேற்றுமை

வீட்டுவாசல்

ஆ. மாடுகன்று

அல்வழி

வீடுவாசல்

மேலே உள்ள உதாரணங்களை நோக்கும்போது பெயரும் பெயரும் சந்தியில் இணைவதைக் காணலாம். இங்குத் தொடரியலே புணர்ச்சிக்கு அடிப்படையாக நின்று விதி வகுக்கிறது (34). மேலும் நோக்கும் போது வேற்றுமையில் புணர்ச்சி நெருக்கமாகவும் அல்வழியில் நெகிழ்வாக-வும் இருப்பதையும் அறியலாம் (பொதுவாக இப்படி இருக்கும்) (35).

**வேற்றுமையின் அடிப்படையில்**

i. பெயர்ச்சொல்லோடு இரண்டாவது வேற்றுமை உருபோ அல்லது நான்காவது வேற்றுமை உருபோ வந்து, தொடர்ந்து வெடிப்பொலி வந்தால், அவ்வொலி இரட்டிக்கும் (36).

அ. காலை + பிடித்தான் › காலைப்பிடித்தான்

இரண்டாம் வேற்றுமை உருபு

ஆ. பரிசை + தந்தான் › பரிசைத்தந்தான்

இ. சிரம்பானுக்கு + போனேன் › சிரம்பானுக்குப்போனேன்

நான்காம் வேற்றுமை உருபு

ஈ. முருகனுக்கு + திருமணம் › முருகனுக்குத் திருமணம்

ii. நிலைமொழியீறு (பெயர்ச்சொல்) அம் என்று முடிந்திருந்து, வருகின்ற வேற்றுமையோடு இணைகையில் (பொதுவாக) அத்து சாரியை தோன்றும் (37).

அ. பணம் + ஐ › பணம் + அத்து + ஐ › பணத்தை

வேற்றுமை

ஆ. மரம் + ஆல் › மரம் + அத்து + ஆல் › மரத்தால்

இ. பணம் + ஓ › பணமோ

ஓ, ஆ இவை இடைச்சொற்களாகும்.

ஈ. மரம் + ஆ › மரமா

**அல்வழியின் அடிப்படை**

புணரியலில் வேற்றுமை இணைவதைப்போல அல்வழி நெருக்கமாக இணையவில்லை என்று முன்னர்க் கண்டோம். இனி அல்வழியில் (தொகைகள் அடிப்படையில்) உம்மைத்-தொகையும் வினைத்தொகையும் ஏனைய தொகைகளிலிருந்து மாறுபடுவதைக் காண்போம்.

i. அ. இரவு + பகல் › இரவு பகல்
ஆ. தாய் + தந்தை › தாய் தந்தை
இ. கொல் + களிறு › கொல் களிறு

உம்மைத்தொகையும் வினைத்தொகையும் இயல்பாகவே உள்ளன.

ஈ. அழி + பொருள் › அழிபொருள்

ii. அ. தண்மை (தண்) + நீர் › தண்ணீர்
ஆ. சதுரம் + பலகை › சதுரப்பலகை
இ. தேன் + மொழி › தேமொழி
ஈ. பொன் + தொடி › பொற்றொடி

இத்தொகைகளில் புணர்ச்சி மாற்றம் தெளிவாகக் காணப்படுகிறது

## முடிவுரை

இக்கட்டுரையின் வழி நாம் சில சந்திவிதிகளை உருபொலியனியல் கண்ணோட்டத்தில் கண்டோம். இன்றைய தமிழில், மரபிலக்கணங்களில் கூறப்பட்டுள்ள சில விதிகள் வழக்கிழந்துவிட்டன. அதே சமயம் உருபொலியனியலுடைய வருகையால் புதிய விதிகள் அறிவியல் நோக்குடன் வழங்கப்பட்டு மொழியை வளர்க்கப் பயன்படுகின்றன. ஒரு விதியை ஏன் பயன்படுத்துகிறோம் என்பதை உருபொலியனியல் காரண காரியங்களுடன் விளக்குவதால், நாம் எளிதாக விளங்கிக் கொள்கிறோம். ஆகவே மொழியியலின் பார்வையில் சந்திவிதிகளை மட்டுமல்லாது ஏனைய பகுதிகளையும் ஆராய்வோமானால், நாம் எல்லோரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் புதிய இலக்கணங்களையே படைக்க முடியும்.

# குறிப்புகள்

1. நன்னூல் காண்டிகையுரை ; சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், மறுபதிப்பு, 1980, நூற்பா 462, பக்கம் 40
2. பொற்கோ ; இலக்கண உலகில் புதிய பார்வை ; சென்னை, தமிழ் நூலகம், 1 பதிப்பு, 1973, பக்கம் 3
3. **Moreshwar Ramachandra Kole ; A Higher Sanskrit Grammar; Delhi, Motilal Banarsidass, reprint edition, 1972, pp. 12**
4. ஆ. வேலுப்பிள்ளை; தமிழ் வரலாற்றிலக்கணம், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 2-ஆம் பதிப்பு, 1979, பக்கம் 89 -98
5. **"But on the other hand, in several respects the internal sandhi differs from the external sandhi in Sanskrit, while in Tamil no difference is generally made in the treatment of sounds in both these varieties of sandhi" -P. S. Subramanya Sastri; History of Grammatical Theories in Tamil and their Relation to the Grammatical literature in Sanskrit; Madras, The Journal of Oriental Research, 1934, pp. 103**
6. செ. வை. சண்முகம்; எழுத்திலக்கணக் கோட்பாடு, அண்ணாமலைநகர், அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகம், 1 பதிப்பு, 1980, பக்கம் 199.
7. நன்னூல் காண்டிகையுரை; சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், மறுபதிப்பு, 1980, நூற்பா 243, பக்கம் 195
8. தொல்காப்பியர் புணரியலை மொழிகளின் முதலும் ஈறும், புணர்தலின் இயல்பு, உருபு புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி, எழுத்துச் சாரியை, புணர்ச்சியில் பொருள் வேறுபடுமிடம் என எடுத்துக்கொண்டுள்ளார். மேலும் தொகை மரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகியவற்றின் மூலமாகவும் புணரியல் விதிகளைக் கூறியுள்ளார். -தொல்காப்பியம்; (எழுத்ததிகாரம் -நச்சினார்க்கினியம்) தேவநேயப் பாவாணர் அடிக்குறிப்புகளுடன், சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், மறுபதிப்பு, ஆகஸ்ட் 1955, பக்கம் 71 -266
9. மேலது ; நூற்பா 107, பக்கம் 73
10, மேலது ; நூற்பா 108, பக்கம் 74
11. மேலது ; நூற்பா 112, பக்கம் 78
12. மேலது ; நூற்பா 109, பக்கம் 76
13. நன்னூலார் உயிரீற்றுப் புணரியலை மூன்று நிலைகளில் வருணித்துள்ளார். அம்மூன்றும் புணர்ச்சி, பொதுப்புணர்ச்சி, உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி என்பனவாம்.
14. மெய்யீற்றுப் புணரியலை மெய்யீற்றின் முன் உயிர், மெய்யீற்றின் முன் மெய், ணகர னகர வீறு, மகர வீறு, யகர ழகர வீறுகள், லகர ளகர வீறு, வகர வீறு, வருமொழித் தகர நகரத் திரிபு, புணரியல்களுக்குப் புறனடை என்ற அடிப்படையில் முப்பத்தாறு நூற்பாக்களை நன்னூலார் கூறியுள்ளார்.
15. உருபு புணரியலை உருபுகள், சாரியை, உருபு புணர்ச்சிக்குச் சிறப்பு விதி, புறனடை எனவாகப் பிரித்து பதினெட்டு நூற்பாக்களில் விதிகளைக் கூறியுள்ளார். (13, 14, 15 இவற்றுக்கான அடிக்குறிப்பைக் கீழே காணவும்) நன்னூல் காண்டிகையுரை ; சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், மறுபதிப்பு 1980, பக்கம் 114 -208
16. மேலது ; நன்னூல் காண்டிகையுரை ; நூற்பா 13, பக்கம் 8
17. மேலது ; நன்னூல் காண்டிகையுரை ; நூற்பா 151, பக்கம் 114
18. **"Sutras 104, 108, 109 in Tolkappiyam are all summarised in his (Nannul) sutra 96. The statements made in sutras 105, 106, have been ommitted by Nannul -G. Vijayavenugopal; A Modern Evaluation of Nannul, Annamalainagar, UGC Grants, 1st. edition. 1968, pp. 196**

19. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் வரலாற்றிலக்கணம், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 2-ஆம் பதிப்பு, 1979, பக்கம் 97
20. "It (morphophonemics) deals with not only the sandhi rules, but several allomorphic variations, realizations of several grammatical categories that have been derived by transformations etc., as well" S. Agesthialingam, a Generative Grammar of Tamil (A Fragment of Tamil Syntax); Annamalainagar, U. G. C Grants, 1st. edition, 1967, pp. 207
21. C. F. Hockett; A Course in Modern Linquistics, New York, Oxford and IBM publishing company, 1958, pp. 281
22. தே. ஆண்டியப்பன்; காப்பியர் நெறி, மதுரை, வெற்றிவேல் பிரசுரம், 1 பதிப்பு, ஜனவரி 1976, பக்கம் 51.
23. முத்துச்சண்முகம்; இக்கால மொழியியல், மதுரை, மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், 2-ஆம் பதிப்பு, சனவரி 1977, பக்கம் 123 -124
24. C. F. Hockett; A course in Modern Linquistics, New York, Oxford and IBM publishing company, 1958, pp. 283
25. செ. வை. சண்முகம்; எழுத்திலக்கணக் கோட்பாடு, அண்ணாமலை நகர், அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகம், 1 பதிப்பு, 1980, பக்கம் 205
26. மேலது, எழுத்திலக்கணக்கோட்பாடு, பக்கம் 206
27. N. Nadaraj Pillai, A Guide for Advanced Learners of Tamil, Mysore, Central Institute of Indian Languages, 1986, pp. 99
28. S. V. Subramanian S. K. M. Irulappan (Editors), Heritage of the Tamils Language anf Grammar, (N. Kumaraswami Raja -old Tamil Sandhi) Madras, International Institute of Tamil Studies, 1980, pp. 61
29. P. Kothandaraman, Studies in Tamil linguistics, Madras, Tamil Nuulagam, 1972, pp. 65
30. Ibid ; Studies in Tamil Linguistics, pp. 65
31. தொல்காப்பியம்; (எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம்) தேவநேயப் பாவாணர் அடிக்குறிப்பு களுடன், சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், மறுபதிப்பு, ஆகஸ்ட் 1955, நூற்பா 113, பக்கம் 79.
32. மேலது ; தொல்காப்பியம், நூற்பா 116, பக்கம் 81
33. நன்னூல் காண்டிகையுரை; சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், மறுபதிப்பு, 1980, நூற்பா 152, பக்கம் 115 -116
34. A. Kothandaraman, Studies in Tamil Linguistics, Madras, Tamil Nuulagam, 1972, pp. 66
35. S. V. Subramanian & K. M. Irulappan (Editors); Heritage of the Tamil Language and Grammar, (S. Subrahmaniyam -sandhi and Punarcci in Tamil), Madras, International Institute of Tamil Studies, 1980, pp. 47
36. Ibid, Heritage of the Tamil Language and Grammar, pp. 75
37. S. Agesthialingam & K. Kushalappa Gouda (editors); Dravidian Case System, (S. P. Thinnappan - Case System and Sandhi in Tamil), Annamalainagar, Annamalai University, 1st. edition, 1976, pp. 409